# 05.10.2026 செய்திகள்

## எல்.என்.ஜி.யில் இயங்கும் ரெயில்

» இரட்டை எரிபொருள்

- மின்மயமாக்கல் பணிகள் ஏறக்குறைய முழுமையடைந்துள்ள நிலையில், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி) மற்றும் டீசல் ஆகிய இரண்டிலும் இயங்கும் புதிய ரெயிலை ரெயில்வே அறிமுகப்படுத்தியது.
- குஜராத் மாநிலம் சபர்மதி ரெயில் நிலையத்தில் இருந்து 8 பெட்டிகளைக் கொண்ட குளிர்சாதன வசதி இல்லாத இந்த ரெயில் சமீபத்தில் தனது சேவையை தொடங்கியது.
- இது முற்றிலும் புதிய ரெயில் அல்ல, ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல் மின்சார ரெயிலில் மாற்றங்கள் செய்யப்பட்டு, இரட்டை எரிபொருளில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.
- இந்திய ரெயில்வேயில் பெரும்பாலான ரெயில்கள் மின்சார என்ஜின்கள் மூலம் இயக்கப்படுகின்றன. மின்மயமாக்கப்படாத வழித்தடங்களில் டீசல் என்ஜின்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- டீசலுக்கு மற்றாக எல்.என்.ஜி. பயன்படுத்துவதன் மூலம் மாசு வெளியேற்றத்தை குறைக்க முடியும். இதனால் நாடு முழுவதும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல் மின்சார ரெயில்களை எல்.என்.ஜியில் இயங்கும் வகையில் படிப்படியாக மாற்றுவதற்கு ரெயில்வே திட்டமிட்டு உள்ளது.

SURESH'

## ஈரான் போர் எப்போது முடியும்?

» போரின் பின்னணி

- பிப்ரவரி 28 இல் இருந்தே தொடங்கலாம். அன்றுதான் அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாக ஈரான் மீது தாக்குதல்தொடுத்தன. இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா முன்வைத்த காரணங்கள் பல, அதில் முதலாவது, ஈரானில் ஆட்சியை மாற்றுவது, இரண்டாவது, ஈரானின் அணு ஆயுத ஆற்றலை அழிப்பது.
- போரின் முதல் நாளிலேயே ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவரது ராணுவத் தளபதிகள், குடும்பத்தினர் பலரும் கொல்லப்பட்டனர்.
- குடிமக்களும் பள்ளிச் சிறாரும் பலியாயினர். எனினும் அமெரிக்கா எதிர்பார்த்ததைப்போல ஈரான் சரணடையவில்லை. மாறாக, அது வளைகுடா நாடுகளில் நிறுவப்பட்டிருக்கும் அமெரிக்க ராணுவத் தளங்களையும், கூடவே இஸ்ரேலையும் தாக்கியது.
- முக்கியமாக, ஹார்முஸ் நீரிணை வழியிலான போக்குவரத்தைத் தடை செய்தது. இந்த நீரிணை பாரசீக வளைகுடாவை ஓமன் வளைகுடா வழியாக அரபிக் கடலுடன் இணைக்கிறது.
- இதன் வழியாகத்தான் உலகத் தேவையில் 20% எரிபொருள் சென்றாக வேண்டும். அது தடைப்பட்டது. உலகெங்கிலும் எரிபொருளின் விலை எகிறியது.

» நிபந்தனைகள்

- எல்லா ராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும். ஈரானியத் துறைமுகங்கள் மீதான முற்றுகை அகற்றப்பட வேண்டும்.
- 1978 முதல் ஈரான் மீது பொருளாதார ரீதியிலான தண்டனைத் தடைகளை விதித்து வருகிறது அமெரிக்கா; இதை விலக்க வேண்டும் – இந்த நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது.
- ஈரான்அணு ஆயுதம் தயாரிக்காது என்கிற உறுதிமொழியும் ஒப்பந்தத்தில் இருந்தது; ஆனால், நீரிணையைத் திறந்து விடுவதே முதன்மை நோக்கமாக மாறிவிட்டதால், அணு ஆயுதம் பின்னுக்குப் போய்விட்டது.
- ஹார்முஸ் நீரிணையின் ஒருபுறம் ஈரானும் மறுபுறம் ஓமனும் கரைகளாக அமைந்திருக்கின்றன. ஜுன் ஒப்பந்தத்துக்குப் பிறகு தங்கள் நாட்டை ஒட்டிய கரை வழியாக மட்டுமே கப்பல்களை ஈரான் அனுமதித்தது,
- ஆனால், சில கப்பல்கள் அமெரிக்காவின் ஆசியுடன் ஓமன் கரை வழியாகச் சென்றன. இப்படியான கப்பல்களை ஈரான் தாக்கத் தொடங்கியது. ஒப்பந்தத்தின்படி நீரிணைப் போக்குவரத்துக்குத் தாங்களே பொறுப்பு.
- ஆகவே, நாங்கள் அங்கீகரித்த வழியாகத்தான் செல்ல வேண்டும் என்று வாதிட்டது ஈரான். இது ஒப்பந்தத்தை மீறிய செயல் என்றது அமெரிக்கா.
- ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட நான்காவது வாரத்தில், போர் இடைநிறுத்தம் முடிந்தது என்று அறிவித்தார் டிரம்ப் (ஜுலை 9). பரஸ்பரத் தாக்குதல் தொடர்ந்தன. மறுபுறம் கத்தார், பாகிஸ்தான் ஊடாகப் பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்தன.

» சமரசமும் பிணக்கமும்

- இந்த நிலையில்தான் நீரிணையைத் திறக்க முன்வருவதாக அறிவித்தது ஈரான். ஜுன் மாதம் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளை இப்போது ஏற்க அமெரிக்கா மறுக்கிறது. ஏன்?
- நீரிணையில் தனது கரையை ஒட்டிய போக்குவரத்தை ஈரான் மட்டுப்படுத்தியது. எனினும் ஓமன் கரையை ஒட்டிய போக்குவரத்து அமெரிக்கக் கப்பற்படையின் பாதுகாப்போது நடைபெறுகிறது.
- செப்டம்பர் மாதம் இவ்விதம் நீரிணையைக் கடந்துபோன கலங்களின் எண்ணிக்கை, போருக்கு முந்தைய காலத்தில் போன கலங்களின் எண்ணிக்கையில் 75% வரை இருக்கலாம்.
- ஓமன் கரை வழியிலான போக்குவரத்துக்கு அமெரிக்கா வழங்கிவரும் பாதுகாப்பு அதிகம் செலவு பிடிக்கக்கூடியது. இதில் ஆபத்தும் அதிகம். காப்பீட்டுத் தொகையும் அதிகம்.
- அதனால்தான் பன்னாட்டுச் சந்தையில் எண்ணெய் விலை குறையவில்லை. இந்தக் கடல் பாதுகாப்பை டிரம்ப்பால் எந்நாளும் வழங்க முடியுமா?
- இரண்டு – ஒப்பந்தத்துக்குப் பிறகான ஈரானின் தாக்குதல்களில் பெருமளவு மட்டுப்பட்டதாக இருந்துவருகிறது. ஈரான் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினால், நீரிணை வழியிலான போக்குவரத்தும், வளைகுடா நாடுகளும் அதிகம் பாதிக்கப்படக்கூடும். இதை எதிர்கொள்ள டிரம்ப்பிடம் திட்டமிருக்கிறதா?

SURESH'